*23*

# தேவனுடைய வல்லமையும் ஞானமும்

## 1 கொரிந்தியர் 1:18–2:5

*"அந்தப்படி நீங்கள் அவராலே கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டிருக்கிறீர்கள். ... அவரே தேவனால் நமக்கு ஞானமும் நீதியும் பரிசுத்தமும் மீட்புமானார்" (1 கொரிந்தியர் 1:30, 31).*

"கிறிஸ்து தேவபெலனும் தேவஞானமுமாயிருக்கிறார்" என்று வேதாகமம் கூறுகிறது (1 கொரிந்தியர் 1:24). இவ்வசனம் இயேசுவைக் கர்த்தர் என்று விளக்குகிறது. நமக்குத் தேவையான யாவற்றையும் இயேசுவுக்குள் தேவன் வைத்திருக்கிறார். நாம் அவருக்குள் முழுமையடைகிறோம் (கொலோசெயர் 2:10). கிறிஸ்தவமே கிறிஸ்துவாக இருக்கிறது. தேவனுடைய கிறிஸ்துவில் கிறிஸ்தவரின் வல்லமை இருக்கிறது, மனிதருடைய முறைமைகளில் அல்ல. இயேசுவின்மீது மாத்திரமே நிறைவான வாழ்வு கட்டியெழுப்பப்பட முடியும். கிறிஸ்தவமானது பகுத்தறிவுள்ளதாகவும் வேண்டிக்கேட்பதாகவும் உள்ளது. மனிதர், முகத்தை எடுப்பாக்கிக் காட்டும் பொருள்களையும் ஒப்பனைகளையும் செய்கிறார். தேவன் மாத்திரமே இருதயத்தை மாற்றுபவராக இருக்கிறார். கிறிஸ்தவம் என்பது ஒரு திட்டமாக அல்ல ஆனால் ஒரு நபர்த்துவமாக உள்ளது.

பாவம் என்பது நமது வாழ்வில் இருந்து சுவிசேஷத்தின் பெலனை வடித்து வெளியேற்றுகிறது (1 கொரிந்தியர் 1:17). கிறிஸ்தவமானது, ஒரு நபரை புதுசிருஷ்டியாக்கி அவருக்குப் புதிய ஜீவனையும் சிந்தையையும் கொடுக்கிறது (2 கொரிந்தியர் 5:17; யோவான் 3:1-7; கலாத்தியர் 2:20ஐக் காணவும்). நாம் தேவனுக்கென்று பிழைக்கும்படிக்குப் பாவத்திற்கு மரிக்கக் கிறிஸ்து நம்மை அழைக்கிறார்.

சிந்திப்பதில் நமது சாதாரண வழியைச் சிலுவையானது தலைகீழாகப் புரட்டிப் போடுகிறது. அது, நாம் வாழ்வதற்காக மரிக்கிறோம் என்றும் நாம் பெறுவதற்காகக் கொடுக்கிறோம் என்றும் கூறுகிறது. அது மேல்நோக்கிய வழி கீழாக உள்ளது என்றும் கடைசியானோர் முதலாவர் என்றும் கூறுகிறது.

சிலுவையில் அறையப்பட்ட தேவன் என்பது ஒரு முரண்தொடைக் கருத்தாக உள்ளது. அவர் சர்வவல்லவராக இருக்கிறார், ஆனால் அவர் தாம் ஒரு மனிதராக இருப்பதை அனுமதித்தார். ஒரு கிறிஸ்தவரும் ஒரு

*முரண்தொடைக் கருத்தாகவே உள்ளார். அவர் உயிருடன் உள்ள ஒரு மரித்த மனிதராக இருக்கிறார். அவர் மரித்திருக்கிறார், ஆயினும் அவர் முழுமையாக உயிர்வாழ்கிறார்! மக்கள் வாழ்வை விரும்புகின்றனர் - ஆனால் சிலுவையானது வாழ்வதற்கு வழியாக மரணத்தை அளிக்கிறது. மக்கள் வெற்றிக்கு ஏங்குகின்றனர் - ஆனால் சிலுவையானது வெற்றிக்கு வழிநடத்துகிற தோல்வியாக உள்ளது. மக்கள் ஆறுதலை விரும்புகின்றனர் - ஆனால் சிலுவையானது நமது மனச்சான்றுகளைக் குத்தி, தேவனுடைய மன்னிப்பில் நாம் ஆறுதல் அடையும்படிக்குச் சுவிசேஷத்திற்குக் கீழ்ப் படியும்படி நம்மை வழிநடத்துகிறது. மக்கள் சமாதானத்தை விரும்பு கின்றனர் - ஆனால் சிலுவையானது சமாதானத்தை விளைவிக்கும் யுத்தத் திற்கு நம்மைக் கொண்டுவருகிறது. மக்கள் அழகை கனப்படுத்துகின்றனர் - ஆனால் சிலுவையானது முரடானதாக அழகற்றதாக உள்ளது, அது மற்ற எல்லா அழகுகளுக்கும் மேன்மையாக உள்ள ஒரு அழகை வெளிப்படுத்துகிறது. நாம் தேவனுடைய வல்லமையையும் ஞானத்தையும் பெற விரும்பினால், சிலுவையின்மீதான கிறிஸ்துவுடன் நாம் தொடங்குகிறோம்.*

## தேவனுடைய பெலனான கிறிஸ்து

*சுவிசேஷத்தின் செய்தியே "இரட்சிப்புக்குத் தேவபெலனாக உள்ளது" என்று பவுல் கூறினார் (ரோமர் 1:16). சிலுவையின் மூலமாகப் பாவிகளை இரட்சிப்பவர் எவ்வகையான தேவனாக இருப்பார்? அவர் கிருபை மற்றும் மன்னிப்பு ஆகியவற்றின் தேவனாக இருக்கிறார்! நமது உலகம் மிருகத்தன மான பெலத்தை ஆராதிக்கிறது. மற்ற எல்லா பெலன்களையும் ஒன்று கூட்டிப் பார்க்கையில், அவற்றைக் காட்டிலும் தேவனுடைய பெலன் மாபெரியதாக உள்ளது. அது பயபக்திக்குரியதாக, என்றென்றும் உள்ளதாக மற்றும் இரக்கம் நிறைந்ததாக உள்ளது.*

*தேவன் தமது வார்த்தையினால் உலகத்தைப் படைத்து அதை நிலை நிறுத்துகிறார் (ஆதியாகமம் 1; 2; எபிரெயர் 1:3). அவர் அருளிரக்கமுள்ள பெலனைக் கொண்டுள்ளார், ஏனெனில் அவர் தம்மீது அன்புகூருகிறவர் களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாகவே செய்கிறார் (ரோமர் 8:28).*

*இருப்பினும், தேவனுடைய மாபெரும் பெலன் சிலுவையில்தான் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அது அவரது பலவீனம் என்று விவரிக்கப்படுகிற பெலனாக உள்ளது! பவுல், "பலமுள்ளவைகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பலவீனமானவைகளைத் தெரிந்துகொண்டார்" என்று கூறினார் (1 கொரிந்தியர் 1:27).*

*அவர் முடிவற்ற தாழ்மை கொண்ட தேவனாக இருக்கிறார். அவர் நமக்கு இரட்சிப்பை அளிக்கிறார், ஆனால் அதை நாம் எடுத்துக்கொள்வதா இல்லையா என்பதை நாமே தேர்ந்துகொள்ளும்படிக்கு அவர் நம்மை அனுமதிக்கிறார். அவர் நமது வாழ்வில் தமது வழியை கட்டாயப்படுத்துவ தில்லை - அவர் கதவருகில் நின்று தட்டுகிறார் (வெளிப்படுத்தின விசேஷம் 3:20). தேவன் நமக்குத் தருகிற சுயாதீனமான தேர்ந்துகொள்ளுதலில், நாம்*

தேவனுடைய தாழ்மையைக் காணுகிறோம். ஒரு சம்மட்டியைக்கொண்டு அடிப்பதினால் நாம் எதையும் வளரச்செய்ய இயலாது என்பதை அவர் தமது அணுகுமுறையின்மூலம் நமக்குப் போதிக்கிறார்.

சிலுவையின்மீது மரிக்கிற ஒரு நிர்வாணமான மனிதரைக் காட்டிலும் உதவியற்ற நிலையில் வேறு எவரும் இருப்பதில்லை, ஆனால் தேவனுடைய மகன் என்ற ஒரு மனிதரின் மூலமாகவே சிலுவையின்மீது, தேவனுடைய மாபெரும் செயல் செய்யப்பட்டது. சிலுவையின் பெலனைப் பற்றி ஆழ்ந்து சிந்தித்துப் பாருங்கள்: இயேசு இந்தப் பாவிக்காக மரிக்கவில்லை என்று எந்த ஒரு பாவியும் கிடையாது; சிலுவையினால் இந்தப் பாவத்தை எடுத்துப்போட முடியாது என்று எந்தப் பாவமும் இல்லை.

கல்வாரியில் இயேசுவின் மரணம் என்பது ஒரு தான்தோன்றித்தனமான அனுபவமாக இருக்கவில்லை. அது உலகம் தொடங்குவதற்கு முன்னரே அறிவிக்கப்பட்டிருந்த நித்திய சத்தியத்தின் நிறைவேற்றமாக இருந்தது. இயேசு வெறும் ஆறுமணி நேரம் மாத்திரம் சிலுவையில் இருக்கவில்லை. ஒரு கருத்தில், அவர் அங்கு முப்பத்து மூன்று ஆண்டுகளாக இருந்தார். அவர் அதைத் தமது பூமிக்குரிய வாழ்வின் ஒவ்வொரு நாளிலும் சந்தித்தார்.

இயேசு நமது இரட்சிப்பின் ஆதாரமூலமாக இருக்கிறார்; சிலுவை என்பது நமது இரட்சிப்பிற்கு வழிமுறையாக இருந்தது. தேவனுடைய பெலன் என்பது பலவீனத்தில் பூரணப்படுத்தப்பட்டது (2 கொரிந்தியர் 12:6-10). இயேசு பலவீனத்தினால் சிலுவையில் அறையப்பட்டிருந்தாலும், அவர் தேவனுடைய பெலத்தை அதில் காட்சிப்படுத்துகிறார் (2 கொரிந்தியர் 13:4). அதைத் தாழ்மையுடன் ஏற்றுக்கொள்ளுதல் என்பது மாத்திரமே நாம் செய்யக்கூடிய எல்லாமுமாக உள்ளது. அதை நாம் புறக்கணித்தால், நமது நித்திய அழிவிற்காகவே அப்படிச் செய்கிறவர்களாக இருப்போம்.

ஜெர்மனி நாட்டைச் சேர்ந்த தத்துவவாதியும் நாத்திகருமான ஃப்ரெடரிக் நீட்சே என்பவர் பெலனை [வல்லமையை/அதிகாரத்தை] மிக அதிகமாக விரும்பினார். அவர், இயேசுவை பலவீனமானவர் என்று நினைத்ததால் அவரைப் பழித்துரைத்தார். நீட்சே மரித்துப்போனார்; சுவிசேஷமோ இன்னமும் பிரசங்கிக்கப்பட்டு வருகிறது.

## தேவனுடைய ஞானமான கிறிஸ்து

இயேசு, "நமக்காகத் தேவனுடைய ஞானமானார்" என்று பவுல் கூறினார் (1 கொரிந்தியர் 1:30). தேவனுடைய மாபெரும் பெலனானது அவரது ஞானத்தினால் வழிநடத்தப்பட்டுள்ளது. நமது இரட்சிப்புக்கான அவரது திட்டமானது அவரது மாபெரும் ஞானத்தின் வெளிப்பாடு ஆகும்.

தேவன் தமது ஞானத்தில், ஒரு சிலுவையைக் கிறிஸ்தவத்தின் மையமாக வைத்தார். சிலுவை என்பது விகாரமானது என்று மனிதன் நினைக்கிறான், ஆனால் அது தேவனுடைய மகிமையின் நிறைவு என்று அவர் கூறுகிறார்.

எல்லாப் பாவத்தையும் விஞ்சிநிற்கும் பாவம் என்பது தவறான யூகமாக

உள்ளது (சங்கீதம் 19:13; 2 பேதுரு 2:10). மனிதன் தான் நினைக்கிறவாறே தேவன் நினைக்கிறார் அல்லது அவ்வாறு அவர் நினைக்க வேண்டும் என்று தவறான யூகம் கொள்கிறான். மனோதத்துவமானது வாழ்வை *மிகச்சிறந்த தாக்குவதாக* வாக்களிக்கிறது. கிறிஸ்து பாவிகளுக்கு ஜீவனை *அளிக்கிறார், என்றென்றைக்குமாக!* மரித்த மனிதர்களுக்கு மறுவாழ்வு அல்ல, ஆனால் ஜீவன் தேவைப்படுகிறது (எபேசியர் 2). தேவனுடைய வல்லமையானது எப்போதுமே மரித்தவர்களை உயிர்ப்பித்துள்ளது. சிலுவையில் தேவன், பாவிகளை மரணத்தில் இருந்து எழுப்புகிறார்.

மனிதன், யுத்தம், ஏழ்மை மற்றும் வியாதி ஆகியவற்றில் இருந்து மீட்பை விரும்புகிறான். சிலுவையின்மீது கிறிஸ்து நம்மைப் பாவங்களில் இருந்து இரட்சிக்கிறார். மனிதன் பாவத்தில் இருந்து இரட்சிக்கப்படாத வரையில், அவனால் யுத்தம், மற்றவர்களைத் தவறாக நடத்துதல் அல்லது சமூக ஸ்திரமின்மை ஆகியவற்றைத் தீர்த்து வைக்க இயலாது. பாவம் என்பது சிலுவையில் மாத்திரமே குணப்படுத்தப்பட முடியும்.

மதிநுட்பம் நிறைந்த மேட்டிமை கொண்டவருக்குச் சிலுவை என்பது இன்னமும் அறிவீனமாகவே உள்ளது. மனிதன் ஞானத்தையல்ல ஆனால் அதிகாரத்தையே/வல்லமையையே விரும்புகிறான் - அவன் விசுவாசத்தை யல்ல ஆனால் ஒளியூட்டப்படுதலையே விரும்புகிறான். ஒருவர், மேட்டிமை, வெறுப்பு மற்றும் பாவம் ஆகியவற்றைப் பற்றிக்கொண்டே அதே வேளையில் சிலுவையையும் பற்றிக்கொண்டிருக்க முடியாது. சிலுவையின் அருகில் நின்றுகொண்டு எவரும் தம்மை உயர்த்திக் கொண்டிருக்க முடியாது.

இரட்சிக்கப்படுவதை விரும்பாத ஒரு உலகத்தை இரட்சிப்பதற்காக இயேசு சிலுவையில் மரித்தார். என்ன ஒரு இரட்சகர்! கிறிஸ்துவை, சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவையே அன்றி வேறொன்றையும் அறியாதிருக்கப் பவுல் தீர்மானித்தார் (1 கொரிந்தியர் 2:1-5). அதை விசுவாசியுங்கள், அதைப்பற்றிப் போதியுங்கள்! சுவிசேஷ செய்தியின் பெலன்மீதுள்ள விசுவாசத்தை ஒருபோதும் இழந்துவிடாதீர்கள்! தேவனின்றி தேவபக்தியுடன் இருப்பதையும், கிறிஸ்து இன்றி கிறிஸ்தவர் களாக இருப்பதையும் ஆவியின்றி ஆவிக்குரிய நிலையில் இருப்பதையும் விட்டு விலக நாம் முயற்சி செய்வோமாக.

தண்டனையின் கருவியொன்றை (சிலுவையை) எடுத்து அதைப் பூமியில் மாபெரும் ஊக்குவித்தலாக்குதல் என்பது தேவனால் மாத்திரமே முடியும். சிலுவையின்றி, சுயத்திற்கு மரிப்பதற்கான பெலன் இல்லை, வாழ்வை முழுமையாக வாழ்வதற்கு ஞானமின்றி வேறுவழியில்லை. இயேசு, "நான் பூமியிலிருந்து உயர்த்தப்பட்டிருக்கும்போது, எல்லாரையும் என்னிடத்தில் இழுத்துக்கொள்ளுவேன்" என்று கூறினார் (யோவான் 12:32). சிலுவையானது தேவனுடைய ஞானம் மற்றும் பெலன் ஆகியவற்றை முதலீடாகக் கொண்டிருப்பதால் அவர் [இயேசு] எல்லா மனிதர்களையும் தம்மிடம் இழுத்துக்கொள்ளக் கூடியவராக இருக்கிறார்.

*சிலுவையைத் தவிர ...*
*வேறு வழி எதுவும் இல்லை!*